முதன்மை சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்.

எம்.சி.ஓ.பி. எண். 26/2020

| | | |
|---|---|---|
| மனுதாரர் தரப்பு சாட்சி | .. | 1 |
| பெயர் | .. | சுந்தரி |
| தகப்பனார் / கணவர் பெயர் | .. | |
| தொழில் | .. | |
| கிராமம் | .. | |
| தாலுக்கா | .. | |

2025 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 01ஆம் நாள் சனிக்கிழமை திரு. சி. குமாரவர்மன், எல்.எல்.எம்., முதன்மை சார்பு நீதிபதி, செய்யாறு அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை**

மனுவில் மனுதாரர். எனது சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் என்னால் சொல்லப்பட்டது. நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையதுதான். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். முதல் தகவல் அறிக்கை ம.சா.ஆ.1, மனுதாரர் ஆதார் அட்டை ம.சா.ஆ.2, வாகன பதிவுச்சான்று ம.சா.ஆ.3, மணிகண்டன் ஓட்டுநர் உரிமம் ம.சா.ஆ.4, வாகன காப்பீட்டு சான்று வா.சா.ஆ.5, மருத்துவ ரசீதுகள் ம.சா.ஆ.6, மருத்துவ ரசீது ம.சா.ஆ.7, மருத்துவ ரசீது ம.சா.ஆ.8, டிஸ்சார்ஜ் சம்மரி ம.சா.ஆ.9, டிஸ்சார்ஜ் சம்மரி ம.சா.ஆ.10, டிஸ்சார்ஜ் சம்மரி ம.சா.ஆ.11. (ம.சா.ஆ.2 அசலுடன்

சரிபார்க்கப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது) (ம.சா.ஆ.6, 7, 8 ஆவணங்கள் 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது)

**<u>குறுக்கு விசாரணை</u>**

விபத்து நடந்த அன்று நானும் 24 நபர்களும் டாடா ஏசி வாகனத்தில் சென்றோம். வந்தவாசி - உத்திரமேரூர் சாலையில் வழூர் கிராமம் அன்பு என்பவர் நிலம் அருகே விபத்து நடந்தது. என்னுடைய உறவினர் இறந்துவிட்டதற்காக வழூர் சென்றோம். டாடா ஏசி வாகன ஓட்டுநர் வாகனத்தை வேகமாக ஓட்டிச்சென்றதில் வாகனம் கவிழ்ந்து விபத்து ஏற்பட்டது. 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தில் 2 பேர் தான் செல்லவேண்டுமென்றும் 1ம் எதிர்மனுதாரர் வாகனம் பொருட்களை ஏற்றிச்செல்லக்கூடிய வாகனம் என்றும் ஆட்கள் பயணம் செய்யக்கூடிய வாகனம் இல்லை என்றும் 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தில் நாங்கள் அனுமதிக்கப்படாத நபர்களாக சென்று விபத்து ஏற்பட்டுள்ளது என்றும் அதனால் காப்பீடு விதிமீறல் நடந்துள்ளது என்றும் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க கடமைபட்டவர் இல்லை என்றும் மனு 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தை ஓட்டிச்சென்ற மணிகண்டனுக்கு விபத்து தேதி, நேரத்தில் செல்லக்கூடிய ஓட்டுநர் உரிமம் இல்லை என்றும் அதனால் காப்பீடு விதிமீறல் நடந்துள்ளது என்றும் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க கடமைபட்டவர் இல்லை என்றால் சரியல்ல. சென்னையில் உள்ள ரைட் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். மருத்துவ ரசீதுகள் வழக்கிற்காக உருவாக்கி தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.